
www.tamilarangam.net

தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES

# தூண்டில்



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR 7

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திசைமாறிய வேட்டுக்களே!

நாம் செய்யும் யுத்தம்
என்றும் ஓயாத சத்தம்
செந்நீரில் மூழ்காமல்
மீளாத நாடு.
கண்ணீரால் நாம் கண்டோம்
வற்றாத ஆறு.

கைகளும் கால்களும்
சுமப்பதேன் விலங்கை?
செவ்வானில் மூழ்கட்டும்
இருள் சூழ்ந்த இலங்கை.

உதிரம் சிந்தும்
உழைக்கும் வர்க்கம்
ஒரு நாள் புரட்சிக்
கனலைக் கக்கும்.

செஞ்சோலைப் பூக்கள்தான்
கொள்கைத் தேன்பாயும் ஊற்று—நீ
வேர்மீது ஊற்றாதே வெந்நீரை வார்த்து.
தோழ்மீது நீ தாங்கும்
துமுக்கியை நீட்டு.
தோழனை, பகைவனை அறிந்தபின்
தீரட்டும் வேட்டு.

-கவிவர்மன்

www.tamilarangam.net

# ஒப்பந்தங்களும் ஒப்பாரிகளும்....

இலங்கைக்கு அதிலும் குறிப்பாக இங்கு வாழுகின்ற தமிழர்களுக்கு மிகவும் பழக்கப்பட்ட சொற்களில் 'ஒப்பந்தம்' என்பதும் ஒன்றாகும். இன்று இது தேத்தண்ணி, கோப்பி போல சாதாரண சொல்லாகி விட்டது. தமிழர்களுக்கு ஒப்பந்தம் எப்போது அறிமுகம் செய்யப்பட்டது?

1957ம் ஆண்டு பண்டாரநாயக்காவும், செல்வநாயகமும் செய்து கொண்ட ஒப்பந்தத்துடனேயே இலங்கையில் ஒப்பந்தத்திற்கான புதிய சரித்திரம் ஆரம்பமாகிவிட்டது. வைக்கோல் கன்றுக் குட்டியைக் காட்டி பசுவிலிருந்து பாலைப் பிழிந்தெடுப்பது போல ஒப்பந்தம் என்ற வெறும் கடுதாசிகளைக் காட்டியே தமிழ் மக்களின் உணர்ச்சிகள், உரிமைகள் நசுக்கப்பட்டன. நசுக்கப்பட்டு வருகின்றன. பாலை இழந்த பின்பும் பசு உயிர் வாழ்கிறது. ஆனால் ஒப்பந்தத்தைநம்பிய மக்களோ ஒப்பந்தத்துடனேயே இல்லாமல் செய்யப்படுகிறார்கள். இந்தக் கடுதாசி ஒப்பந்தங்கள் மக்களை ஏமாற்றுவதோடு மட்டும் நின்றுவிடாது சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அப்பாவிகளின் உயிர்களையும் பறித்து வருகின்றன.

மேடைப் பிரச்சாரம், வேலை நிறுத்தம், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் போன்ற சாத்வீகப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவை அரசால் முறியடிக்கப்பட்டபின் ஆயுதப் போராட்டம் இன்றைய நிலையில் நிர்ப்பந்தமாகியுள்ளது. ஆனால் இன்றும் கூட ஒப்பந்தங்கள் தமது பழைய மரபைக் கைவிடாமல் சமாதானம், அமைதியையே கேலிக்கிடமாக்கி தொடர்ந்தும் இரத்தத்தை ருசி பார்த்துக் கொண்டு வருகின்றன. ஒப்பந்தங்கள் ஒடுக்கப்பட்ட மக்களை எப்படியெல்லாம் பாதித்துக் கொண்டு வருகின்றன என்பதை அறிவதற்கு பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டும்.

1915 லேயே இரு சமூகங்களுக்கிடையிலான கலவரங்கள் ஆரம்பமாகிவிட்டன. சிங்கள, முஸ்லீம் கலவரங்களே இப்படி ஆரம்பிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டன.இந்தக் கலவரங்களுக்கு காரணமான சிங்கள இனவாதிகளை பிரிட்டிஷ் அரசிடம் வாதிட்டு விடுதலை செய்தவர்கள் தமிழ்த் தலைவர்கள் தான்.இதனால்தான் கடந்தகால மேடைப் பேச்சுகளில் "சிங்களவர்களால் நாம் பல்லக்கில் தூக்கி வரப்பட்டோம்" என்று அந்தத் தமிழ் 'தலைவர்கள்' முழங்கினார்கள்.இனவாதம் இப்படியாகத் தான் ஆரம்பமானது.

1947ம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்க சிறுபான்மைத் தமிழருக்குப் பாதுகாப்பளிக்கப்படும் என்று வெற்று அறிக்கை மூலம் 'உத்தரவாதமளித்தார்'.1949ம் ஆண்டு மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது ஜி.ஜி.பொன்னம்பலம் ஆதரித்து வாக்களித்தார்.

1956ல் பண்டாரநாயக்கவினால் 'சிங்களம் மட்டும்' சட்டம் கொண்டு வரப்பட்டது.சமஷ்டிக் கட்சி இச் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் ஆரம்பித்த போது சிங்களக் கும்பலினால் தாக்கப்பட்டார்கள்.இதனைத் தொடர்ந்து கொழும்புத் தமிழர்களுக்கெதிராகவும், கல்லோயா பள்ளத்தாக்கு குடியேற்றத் தமிழர்களுக்கெதிராகவும் வன்முறைகள் ஆரம்பமாகின.கடைகள்,வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.பல கொலைகள் நிகழ்ந்தன.சாத்வீகப் போராட்டத்திற்கு கிடைத்த முதலாவது பதில் இந்த வன்முறைச் சம்பவங்களாகும்.

1964ல் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டு மலையக மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.மலையக மக்களை இந்தியாவுக்குப் பலாத்காரமாகத் திருப்பியனுப்ப வழி செய்யப்பட்டது.இந்த அநீதியான நடவடிக்கையை யாரும் எதிர்க்கவில்லை.ஆரம்பத்திலிருந்தே இடதுசாரிகள் மலையக மக்களின் வாக்குகளில் பெரிதும் தங்கியிருந்தார்கள். இவர்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப செயற்பட்டமையினால் தொழிற்சங்கங்களை கொண்டிருந்தாலும் 1949லோ,1964லிலோ எவ்வித போராட்டங்களையும் நடத்தவில்லை.

56ல் செய்யப்பட்ட ஒப்பந்தம் வன்முறைகளை உண்டாக்கியது.64ல் செய்யப்பட்ட ஒப்பந்தமோ உரிமைகளையே பறித்தது.தமது நிலமையை உணர்ந்த பல தமிழர்கள் மறுபடியும் விழித்தெழுந்து குரல் கொடுக்க முனைந்தபோது அதை அடக்குமுகமாக 1965ல் டட்லி—செல்வா ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.இதில் மாவட்ட சபைகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் சிறுபான்மையினருக்கு அதிக சலுகைகள் கிடைத்துவிட்டன,சிங்களவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிட்டது என்றெல்லாம் வழக்கம் போலவே சிங்கள பிற்போக்குவாதிகளால் ஒப்பந்தத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்யப்பட்டது.இதன் பலனாக 1971ல் பிற்போக்குக் கும்பலினால் மறுபடி இனக்கலவரம் ஆரம்பிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டது. தமிழரின் தொழிற்கூடங்கள் சேதமாக்கப்பட்டன. கற்பழிப்புகள், கொலைகள் கண்மூடித்தனமாக நடந்தன. தமிழர்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு அகதிகளாக வெளியேறினர். இக் கலவரத்துடன் ஒப்பந்தமும் மறைந்து போனது.

1977ல் நடைபெற்ற தேர்தல் ஆட்சியைத் தலைகீழாக மாற்றியது. ஐ. தே. க ஆட்சியைப் பிடிப்பதற்குத் தமிழர்களே காரணம் என்றும், எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்துக்குள்ளும் தமிழர்கள் வந்து விட்டார்கள் என்றும் சிங்கள பிற்போக்குவாதிகள் சினமடைந்தார்கள். இதன் விளைவாக மறுபடியும் இனக்கலவரம் ஆரம்பமாகியது. மறுபடி கொள்ளைகள், கொலைகள், சேதங்கள் யாவும் நிகழ்த்தப்பட்டன.

1915லிருந்தே எந்தப் பாதுகாப்புமில்லாமல் மரணத்தை மட்டுமே சந்தித்துக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட இனம் தனது சாத்வீகப் போராட்டங்கள் தொடர்ந்து முரட்டுத்தனமாக அடக்கப்பட்டதையடுத்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இந்த விழிப்புணர்ச்சியை தெரிந்துகொண்ட அரசாங்கம் சிறுபான்மையினரின் மத்தியில் துளிர்விடும் உணர்ச்சிகளை இல்லாதொழிக்கச் செய்யவும், அவர்களை மிரட்டவும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தது.

1983 ஜூலை மாதம் திருநெல்வேலியில் 13 இராணுவம் கொல்லப்பட்ட சம்பவத்தை காரணமாக வைத்து அரசாங்கமே இனக் கலவரத்தை ஆரம்பித்தது. அரசபடைகள் வெளிப்படையாகவே வெறியாடின. காட்டுமிராண்டித்தனமான கொலைகள் ஏராளமாக இடம் பெற்றன. பாடசாலைகள், நூல்நிலையங்கள், வீடுகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் தென்பகுதியில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் குரூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

கடந்த நாலு வருடங்களாக நடந்த போராட்டம் பற்றி பார்க்குமுன் தமிழர்கள் கடந்த காலங்களில் சந்தித்த ஒப்பந்தங்கள் பற்றியும், இவற்றுக்கு தமது பங்களிப்புகளையும் வழங்கிய தலைமைகளைப்பற்றியும் புரிந்து கொள்ள வேண்டும்.

மலையக மக்கள் ஆரம்பத்திலிருந்தே இடதுசாரிகளுக்கே தங்கள் ஆதரவை வழங்கி வந்தனர். ஆனால் இடதுசாரிகள் மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும்போது மௌனமாகவே இருந்தார்கள். மலையக மக்களை இந்தியாவுக்குப் பலாத்காரமாக அனுப்புவதில் இவர்களும் உடந்தையாகவே இருந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, கடந்த கால இனக்கலவரங்களில் இவர்களின் பங்கும் கணிசமானளவு உண்டு.

www.tamilarangam.net

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வடக்கும், கிழக்கும் சிறுபான்மைத் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்றும் இரண்டும் இணைக்கப்பட வேண்டும் என்றும் 1957லிலிருந்தே கூறி வந்திருக்கின்றன. இப்படி இவர்கள் சொல்வது சிறுபான்மையினரின் நலனுக்காக அல்ல. அவர்களுக்கிருக்கும் அற்ப, சொற்ப உரிமையையும் பறிப்பதற்கும், தமிழர்களால் சிங்களவர்களுக்கு ஆபத்து எனப் பிரச்சாரம் செய்து இனவாதத்தை வளர்ப்பதற்கும், தமிழ்ப் பகுதிகளை சிங்களக்குடியேற்றங்கள் மூலம் பறிப்பதற்குமேயாகும். இதற்காகவே காலத்திற்கு காலம் புதிய, புதிய ஒப்பந்தங்களைச் செய்து, அதன் மூலம் கலவரங்களை உண்டாக்கி, பின்னர் ஒப்பந்தங்களை கிழித்தெறிந்து சிறுபான்மையை ஏமாற்றி வருகின்றன.

தமிழர்கள் ஏமாற்றப்படுவதற்கு தமிழ்த் தலைமைகளின் பங்களிப்பும் உண்டு. பாராளுமன்ற ஆசனங்களுக்காகவும், அரசு கொடுக்கும் மந்திரி பதவிகளுக்காகவும் வெற்று ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்டு அரசுடன் ஒட்டியிருந்து வந்திருக்கிறார்கள். இவர்களது செயற்பாடுகளும் சிங்களத் தலைவர்களின் செயற்பாடுகளைப் போன்றதே எனத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டதனால்தான் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளித்தார்கள். பிற்போக்குவாத சிங்கள அரசுடன் வாழ முடியாது என்பதை திட்டவட்டமாக உணர்ந்த பின்பே தங்களுக்கென்றொரு நாடு வேண்டும் என்ற நிலையில் உரிமைகளை நிலைநாட்டவும், பறிபோகும் பிரதேசங்களைப் பாதுகாக்கவும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

போராட்டம் வெளிப்படையாக ஆரம்பமாகிய பின்பு ஒவ்வொரு போராட்டக் குழுவும் போட்டி போட்டுக் கொண்டு ஆள் திரட்டுவதிலும், கொள்ளையடித்துப் பணம் சேர்ப்பதிலும் முக்கியமாக கவனம் செலுத்தினார்கள். ஒவ்வொரு குழுவும் அபரிமிதமான, கட்டுப்பாடற்ற வளர்ச்சியடைய இந்தியாவும் முழுமையாக உதவியது. பதவி வெறியிலும், தனிப்பட்ட குரோதத்திலும் குழுக்களுக்குள்ளும், குழுக்களுக்கிடையேயும் நூற்றுக் கணக்கான போராளிகள் கோரத்தனமாக கொலை செய்யப்பட்டார்கள். இதனால் சில குழுக்கள் அழிந்து போக ஏனையவை தனிநபர் ஆதிக்கத்தை உருவாக்கின.

போராட்டக் குழுக்களின் வளர்ச்சியும், இந்தியாவின் மறைமுகமான பயமுறுத்தலும் இலங்கை அரசை இந்தியாவின் உதவியை நாட வைத்தன. தான் வளர்த்த குழுக்களின் போக்கு அதிருப்தியைத் தரவே தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த இந்தியத இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொண்ட தமிழர்களில் பலர் இப்போது இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதேன்? 57ம் ஆண்டிலிருந்தே

www.tamilarangam.net

ஒப்பந்தம் என்றாலே ஒப்பாரிதான் கேட்கும் என்று அனுபவ வாயிலாகவே தெரிந்து கொண்டும் இன்று ராஜீவ்—ஜே.ஆர் ஒப்பந்தத்தை பலர் வரவேற்பதேன்?

முதலாவது காரணம் விரக்தி அல்லது சலிப்பு.கடந்த காலப் போராட்டங்களில் 15,000க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகிவிட்டன. 3,000 க்குமதிகமானோர் ஊனமடைந்துவிட்டார்கள்.வீடுகள்,கடைகள்,பாடசாலைகள் யாவும் தரைமட்டமாகிவிட்டன.இளம் சமுதாயத்தின் கல்வி முற்றாக நாசமாக்கப்பட்டது.எல்லாவற்றையும் இழந்த நிலையில் பலர் அகதி முகாம்களில் இருக்கிறார்கள்.இவ்வளவு இழப்புகளை இழந்தும் என்ன கிடைத்தது?இருப்பவர்களும் இருப்பவைகளும் பிழைக்கட்டுமே என்ற மனோ நிலை வந்துவிட்டது.

இரண்டாவது காரணம் வெறுப்பு அல்லது பயம். 'பெடியங்கள்' என்று ஆசையோடு வர்ணிக்கப்பட்ட விடுதலைக் குழுக்கள் உட்கட்சிக்கொலைகளையும்,சகோதரக் கொலைகளையும் பகிரங்கமாகவும்,மறைமுகமாகவும் நடாத்தியபோது மக்கள் திகிலடைந்து விட்டார்கள்.ஆதரவளித்த மக்களுக்கு முன்னாலேயே விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டார்கள்.வாகனங்களில் கட்டப்பட்டு வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்டார்கள்.வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.தமது கருத்தை வெளிப்படையாகத் தெரிவிப்பவர்களும்,பொது நலத் தொண்டுகளில் ஈடுபடுவோரும் சமூக விரோதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு படுகொலை செய்யப்படுகிறார்கள்.இந்த நிகழ்வுகளால் கிணறு வெட்டப் போய் பூதம் வந்துவிட்டதோ என்ற நிலையில் பலருக்குப் பயம் அல்லது வெறுப்பு வந்துவிட்டது.

தமிழ் மக்களின் நிலை இப்படியிருக்க சில குழுக்களோ இலங்கை,இந்திய ஒப்பந்தம் மூலம் தங்களுக்குப் பதவிகள் கிடைக்கலாம் என்ற நப்பாசையில் அவர்களை வரவேற்று கூத்தாடினார்கள்.சில குழுக்கள் இந்திய இராணுவத்துடன் தமிழ்ப் பகுதிக்கு வந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை முழுமூச்சாக செய்து கொடுத்து இந்திய இராணுவத்தின் செல்லப்பிள்ளைகளானார்கள்.போராட்டத்தை தொடர்ந்தது தாங்களே,அதனால் தங்களுக்குத்தான் இடைக்கால நிர்வாகம் தரப்பட வேண்டும் என்று வேறொரு குழு கூறியது.இதில் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளில் இந்திய இராணுவத்திற்கும் எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையில் மோதல்கள் ஆரம்பித்து நடக்கின்றன.இலங்கை,இந்திய ஒப்பந்தத்தின் பின் 5,000க்கு மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்திய இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து இயங்கும் 'விடுதலைக்' குழுக்கள் தங்கள் சுயநலத்தையும்,சுயரூபத்தையும் மக்

www.tamilarangam.net

களுக்கு காட்ட ஒரு வாய்ப்பளித்தமையே இந்தியா தனது பாதுகாப்புக்காகவும், பிராந்திய ஆதிக்கத்துக்காகவும் செய்து கொண்ட இந்த ஒப்பந்தத்தினால் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரே ஒரு நன்மையாகும்.

இன்று யாருக்காகப் போராட்டத்தை ஆரம்பித்தோம் என்று எல்லாக் குழுக்களும் மறந்து போய்விட்டன. பதவி ஆசையில் போட்டா போட்டி போட்டுக் கொண்டு மக்களை ஆடு, மாடுகள் போல் பகிஷ்கரிப்பு, கர்த்தால், மறியல் போராட்டம் என்று ஏய்க்கிறார்கள். இவ்வாறு சீரழிந்த நிலையில் போராட்டம் காணப்பட்டாலும் புரட்சிகரமான குணம்சங்களைக் கொண்ட போராளிகளும், மக்களும் இல்லாமலில்லை. தங்களின் கைகளை நம்பியே தங்கள் உரிமைகளைப் பெற இன்னும் பலர் முயன்று கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதற்கிடையில் விரைவில் புதிய ஒப்பந்தம் ஒன்று உருவாவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவ் வொப்பந்தம் இடைக்கால நிர்வாகம் யாருக்கு என்பதைப் பற்றியதாகவே இருக்கும். இது மக்களிடம் அதிக காலம் நீடிக்காமல் தூக்கியெறியப்படும்.

போய் முடிந்த ஜூலை மாதங்கள் கறுப்பு மாதங்களாகவே போகட்டும். இனிவரும் மாதங்களாவது சமாதானமும், அமைதியும் நிரம்பியதாக இருக்கட்டும். இதற்காக விடுதலைக் குழுக்களும், ஆதரவாளர்களும் தங்களை சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். தங்களுக்காகவென்றில்லாமல் மக்களுக்காக நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

கடந்த காலங்களிலெல்லாம் வெறும் பார்வையாளர்களாகவே இருந்து இரத்தக் களரியை ரசித்தவர்கள் இனிமேலாவது தங்காலான பங்களிப்புகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சக்தி மறைந்திருக்கிறது. இனியும் காலம் தாழ்த்தாது மற்றவர்களுக்கும் பயனளிக்கக்கூடிய முறையில் எங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வோம்.

"சில நியாயங்களைக் காட்டி, போராட்டத்தை அழித்து விடுவது சரியல்ல; எமக்குள்ளே உள்ள சில முரண்பாடுகளுக்காக சரணாகதி அடையக் கூடாது. எமது தேசிய இனத்தின் சுயாதீனத்திற்கான வாய்ப்புக்களை செயலுருப்படுத்த வேண்டும். அதற்காக, ஓர் அரசியல் தளம் வளர வேண்டும். அந்த அடித்தளத்தில் சரணாகதியற்ற ஓர் தீர்வுக்கே நாம் போகவேண்டும்."

மு. திருநாவுக்கரசு

www.tamilarangam.net

# தீயின் வார்ப்புகள்.

— அம்பலவன்புவனேந்திரன்..

எங்கள் ஆத்மாக்களின் அழுகை
உங்களுக்குக் கேட்க நியாயமில்லைத்தான்.....
எங்கள் கண்ணீரின் கதைகளை
வடித்தெடுப்பதற்கு வார்த்தைகளேயில்லை.
எந்தச் சகோதரியோ
தன் குழந்தைக்கு —ஒரு
சிப்பாயை அப்பாவாக்கியதை
தப்பாகப் பேசுகிறீர்கள்....
வேலியில்லாத பயிர்—என்று
கேலி பேசுபவர்களுக்கும்
காலி நாய்களின் பார்வைக்கு
கதவு போடவுமே—அவள்
காவல் போட்டுக் கொண்டாள்....

இன்னென்று——
என் தோழியொருத்தி
கடிதக்காரனின் காக்கிச்சட்டைக்கே
பயந்து நடுங்குகிறவள்....
இன்று
காவற்படை வீரனின்
காதற் கடிதத்திற்கு காத்திருக்கிறாள்....
அவள் கையேந்தவில்லை.
தன் கற்புக்குக்
காவல் ஒன்று தேவை என்று
கணவன் வரம் கேட்கிறாள்.
உங்களைத்தான் கேட்கிறேன்..
முகங்கொடுக்க முடியாமல்
முக்கால் அழுகிறீர்களே
வதையும் உபாதையுமாய்
வாழ்கின்ற எங்களுக்கு
வாழ்வுதர யார் வரப்போகிறீர்கள்?

www.tamilarangam.net

வழிகாட்டுவோம். -என்று
வெளியேறிய நீங்கள்
வெளிநாடுகளில் கோழையாக
ஒளிந்து கொண்டு
ஒப்பாரி வைக்கிறீர்கள்.
உங்களை நம்புவதை விடுத்து. -நாம்
வங்கக்கடலை நம்புகிறோம்.

எங்கள் வருங்காலம்
எங்களின் கையிற் தான்
அதனாலே புதிய பயணத்தை
நாங்கள் தொடங்கினோம்
எங்கள் கைகளில்
அரிக்கன் விளக்குகளில்லை
நாங்களே தீப்பந்தங்கள்
எங்களுக்கு எதற்கு விளக்கு....?

தீயில் குறையிருப்பதில்லை
அதனாற்தான்-இன்னும்
சீதையும் கண்ணகியும்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



---

வாசகர்களுக்கு,

"வீண் கொண்டாட்டங்கள்" என்ற ஆக்கம் சம்பந்தமாக இரண்டு விமர்சனங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. ஒரு விமர்சனத்தை சுதா என்பவர் முகவரியில்லாமல் அனுப்பியுள்ளார். இரண்டாவது விமர்சனம் எவர்ஸ்விங்கெல் நகரத்திலிருந்து பெயர், முகவரி எதுவுமில்லாமல் வந்துள்ளது. இப்படி மொட்டையாக வரும் கடிதங்களுக்கோ, ஆக்கங்களுக்கோ மதிப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இவர்களைப் போன்றவர்கள் இனிமேலாவது இப்படியான அநாகரிகங்களை தவிர்த்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம். மேற்குறிப்பிட்ட இரு விமர்சகர்களும் இனியாவது முழு விபரங்களையும் தர முன்வந்தால் அடுத்த கலத்தில் அவர்களுடைய விமர்சனங்கள் பிரசுரிக்கப்படும்.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# உணர்வற்ற மனம்

விக்னா பாக்கியநாதன்

இன்று பெண் பார்க்க வருகிறார்கள் என்று தரகர் ஏற்கனவே அறிவித்தல் தந்திருந்தார். இது ரேணுகாவிற்கு முதல் முறையல்ல. இதோடு எத்தனை தரம் எத்தனை ரகமான மாப்பிள்ளைகள் மாப்பிள்ளை வீட்டார்கள் வந்து அவளைப்பார்த்துவிட்டு--- தேநீர் குடித்துவிட்டு-கதைபரிமாறிவிட்டு---எதற்கும் போய்க்கடிதம் போடுகிறோம் என்று நாகரீகமாகச் சொல்லிவிட்டனர். ஆனால் அவ்வாறு கடிதம் எழுதினார்களா?என்று கேட்டால் அதுவும் இல்லை. தமிழ்ப்பண்பாடு நல்ல பண்பாடு தான். ஒருவருக்கு ஒரு செய்தியை எப்படி மனம் நோகாமல், தாமும் தப்பிக் கொள்ளக்கூடிய முறையில் ஒருவருக்கு வெளிப்படுத்துவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே தான். இது ரேணுவின் பெண்பார்க்கும் படலங்களிலிருந்து அவள் அனுமானித்துக் கொண்டவை.

இன்றைக்கு மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள் என்று ரேணுகாவின் அம்மா, அப்பா, சகோதரர்கள் இது தான் முதற்தடவைமாதிரி ஓடியாடி வேலை செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களின் பரிதாப நிலையைப் பார்த்து அவள்---மாப்பிள்ளைவீட்டார் வந்தால் வந்துவிட்டுப் போகட்டுமே. அதற்கேன் இந்தத் தடல்புடல்? அவர்களும் பூலோக வாசிகள்தானே?இவ்வாறு ரேணுவின் மனம் கேட்டுக்கொண்டேயிருக்கும். என்னவோ பெற்றோரின் திருப்திக்காகவே "பெண்பார்க்க" அவள் ஒப்புக்கொண்டாள். அலங்காரம் செய்து உட்காருவதும் அவர்கள் தன்னை கால்முதல் தலைவரை பார்ப்பதும், பின்னர் பக்கத்தில் உள்ளோருடன் சுரண்டி கையாற் கதைப்பதும் அவளுக்கு வெறுத்துவிட்டது. சிலர் சீதனத்தை விரும்பி வந்தனர். அது பற்றாமற் போகவே பதில் தராமல் விட்டமை, அடுத்த கிழமை சொல்கிறோம் என்ற வாய்ப்பாடெல்லாம் அவளுக்கு மனப்பாடம் ஆகிவிட்டது.

ரேணுகாவுக்கு அப்போது பதினேழு வயதிருக்கும். பாடசாலையொன்றில் ஏ.எல் செய்துகொண்டிருந்தாள். அவளது அப்பாவின் தங்கையின் மகன் தயாளன் ரேணுகாவின் வீட்டுக்கு வந்து மாமா, மாமி உறவு கொண்டாடிச் செல்வான். இவன் மருதானையில் கடையில் தகப்பனுடன் வேலைசெய்தான். தீபாவளி, வருடப்பிறப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொங்கல் என்று ஊருக்கு வரும்போது ரேணுவின் வீட்டுக்கு செல்லத் தவறுவதில்லை. ரேணுகாவைவிடப் பத்து வயது மூத்தவன். ரேணுவிற்கு அவனைக் கண்டால் பிடிக்காது. ஆனால் தயாளனோ எந்நேரமும் மச்சாள் மச்சாள் என்றும் பெண்டாட்டி என்றும் அவளைக் கேலிசெய்வான். தான் ஒரு முதலாளியின் மகனென்றும் தனக்கு எத்தனைபேர் பெண் கொடுக்க வருவார்கள் என்றும் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிவான். அவனிடம் போதியளவு காசு இருந்தது. அதற்காக எல்லாப் பெண்களும் தன்னை விரும்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? இது அவனது அறியாமை என்றுதான் சொல்ல வேண்டும். காலம் செல்ல ரேணுவும் பாடசாலை படிப்பை நிறுத்தி அம்மாவுக்கு உதவியாகச் சேர்ந்து கொண்டாள். அவளுக்கு வீட்டில் பொழுது போவது கடினமாக இருந்தபோது தையல்வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன. ரேணுகாவிற்கு திருமணப் பேச்சு எடுத்தபோதெல்லாம் மாமாவின் மகன் தயாளன்நானே ரேணுவைத் திருமணம் செய்யப் போகிறேன், அதற்குத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் எனக்கூறி அவளுக்குச் சவால்விட்டுக் கதைப்பான். அவளது அப்பாவுடன் கதைத்து அவரைத் தன்வசப்படுத்திவிட்டான். ரேணுவுக்கு உள்ளூர விருப்பமேயில்லை. சீதனமில்லாமல் செய்வேன் என்றபடியால் அவளது தந்தையும் அதனைச் சாதகமாக்கிவிட்டார் ஒன்றும் செய்யமுடியாத ரேணு சீதனத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டு இந்தச்சீதனத்திற்தானே என்னை இந்தக்கல்யாணத்திற்கு அப்பா பலியாக்க முயன்றுள்ளார் என்று மனம் நொந்தவண்ணம் ஒப்புக்கொண்டுவிட்டாள்.

ஒரு பெண் ஒருவரை மாப்பிள்ளையாக ஏற்கும்போது உள்ளூர விருப்பம் இருக்கவேண்டும். ஆனால் ரேணுவுக்கோ தயாளனை எந்நேரமும் கண்டு அவர் குணநடத்தைகளை அறிந்து, பழக்கவழக்கத்தைப் புரிந்தபின் மாப்பிள்ளையென்றோ, கணவனென்றோ ஏற்க மனம் சங்கடப்பட்டது. இருந்தாலும் பெற்றோரின் விருப்பத்திற்காக அவள் சம்மதித்தாள். கலியாணமும் சிறப்பாக நடந்து நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஒரு மாதத்தின்பின் தயாளன் தனது தொழிலைத் தொடங்குவதற்கு ஆயத்தமானான். ஆனால் மனைவியைவிட்டுப்பிரிய மனம் சங்கடப்பட்டது. இருந்தாலும் போகவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி மனைவியிடம் விடை பெற்றுச் சென்றான். அவ்வாறு செல்லும்போது எங்கிருந்தோ வந்தலொறி ஒன்றினால் மோதப்பட்டு அவ்விடத்திலேயே தனது இல்வாழ்க்கையை மட்டுமன்றி பூலோக வாழ்வையும் முடித்துக் கொண்டான். சாண்டிய திரிசாண்டி சுடர்விடுமுன் எண்ணெய்க்குள் அமிழ்ந்து தணிந்ததுபோல் ரேணுவின் வாழ்வு அஸ்தமித்துவிட்டது. மணமாகி ஒருமாதத்தில் மணவாழ்க்கையை இழந்தாள். அன்று தொடங்கிய பெண்பார்க்கும் படலம் இன்றுவரை நடந்துகொண்டே இருக்கிறது. ஒருவராவது அவளை மனைவியாக ஏற்க இன்னும் முன்வரவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தாலி அறுத்தவள்" என்ற பட்டப்பெயர் அவளது மறுகல்யாணத்திற்கு முன்வந்து தடையாக நிற்கும். ஆனால் அவளது கல்யாணத்தின்போது தயாளன் அரசியற் கலகம் காரணமாக ஊரடங்குச்சட்டம் இருந்தபோது தாலிகட்டாமலேயே திருமணம் செய்துகொண்டாள். ஆறு மாதத்தின்பின் தாலியைக் கட்டலாமென ஒத்திவைத்து ஏனைய சடங்குகள் முறையாகச் செய்தனர். ஆனால் இப்போது தாலி அறுத்தவள் என்ற ஒரு பெயரைச் சுமந்தவண்ணம் இருக்கிறாள் ரேணுகா. ரேணுகாவிற்கு மனதில் ஒரு கேள்வி எழுந்தது. நான் களங்கப்பட்டவள் என்று ஏன் இந்தச்சமுதாயம் கருதுகிறது? இயற்கையின் தீர்ப்பு, கடவுளின் செயல். என்றும் இவள் என்னதவறு செய்தாள் என்றும் ஒரு உயிராவது நினைக்கிறதா? என்பதாகும்.

வேண்டா வெறுப்பாக நீ செய்த கல்யாணம் அப்படியே போயிற்று என அவளது தாய் நச்சரித்துக்கொண்டேயிருந்தாள். மறு பக்கம் ஊராரின் கதைகள். இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு ரேணு எப்படி வாழ்வது? இருந்தும் அவளது அப்பா எவனாவது கட்டவருவான் என தனது முயற்சியைத் தளரவிடாது செயற்பட்டுவந்தார். அதன் பிரதிபலிப்புத்தான் இன்று மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள்.

மாப்பிள்ளை ஏ.எல் படித்துமுடித்துவிட்டு யூனிவசிற்றிப்பிரவேசம் கிடைத்தது. படிக்காமல் ஜேர்மன் போய்விட்டாராம். இப்போது பிரச்சனையெல்லாம் முடிந்ததும் முடியாததுமான நிலையிலிருக்கு வந்திருக்கிறார். வயது முப்பத்தெட்டு என்றும் தரகர் சொன்னார். சாதகமும் பொருந்தியிருக்கிறது. எல்லாம் சரி. சீதனத்தைப் பேசினர். ரேணுகாவின் கடந்தகாலத்தின்மேல் தந்தையார் ஒருமுறை பேச்சோடு பேச்சாக உரசினார். உடனே மாப்பிள்ளையின் பெற்றோர் துள்ளிக்குதித்து எழும்பி பிறகு சொல்கிறோம் எனச்சென்றுவிட்டனர். இது ரேணுகாவுக்கு வாழ்க்கைத் தளிரைக் கிள்ளியெறிந்தது போலிருந்தது.

இரண்டு கிழமைகளின் பின்னர் ரேணுவின் தமையனின் நண்பனின்மூலம் இந்த மாப்பிள்ளைபற்றித் தகவல் கிடைத்தது. மாப்பிள்ளை ஜேர்மனியில் இருக்கும்போது ஒரு ஜேர்மன் பெண்ணுடன் நட்பாக இருந்து திருமணம்செய்ய முடிவெடுத்தபோது அவள் மாறிவிட்டாள் என்று செய்தி கிடைத்தது. இதைக்கேட்ட ரேணுவின் மனம் கொதித்தது. அந்த மாப்பிள்ளை அப்படி வாழ்ந்துவிட்டு என்னை ஏளனம் செய்ய எப்படி மனம் வந்தது? மாப்பிள்ளை பிழைவிடலாம். அதுவும் தெரிந்துகொண்டு தவறுசெய்யலாம். பெண்கள் தெரியாமலும் பிழைவிடக்கூடாது. இதுதான் நம் ஆண்களின் கொள்கை. என்று நொந்தவண்ணம் தனது வேலையான தையலில் பழையபடி மூழ்கிவிட்டாள்.

சில தினங்களின் பின்னர் ரேணுகாவின் பாடசாலைத் தோழி மாலதி அவளிடம் வந்தாள். மாலதி திருமணமாகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிவிட்டாள். தனது பாலிய நண்பி ரேணுவின் வாழ்க்கை இப்படிப் பூத்துக் குலுங்காமலிருப்பது அவளுக்கு வேதனையாக இருந்தது. என்ன ரேணு அன்று மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். என்ன செய்தி என்று கேட்டாள். அதையேன் பேசுவான்? ஏதோ என்னுடைய குறையைச் சொல்லி நழுவிவிட்டார்கள். என் தலையெ முத்து இது. மாப்பிள்ளை ஜேர்மனியில் இருந்தபோது ஜேர்மன்காரியைத் தான் திருமணம் செய்ய இருந்தவராம். பின்னர் சரிவரவில்லையென்று இங்கு வந்திருக்கிறாராம். என்றாள் ரேணு. இதைக்கேட்ட மாலதி நீ என்ன சொல்லுகிறாய்? தானும் தப்புச் செய்துவிட்டு மகாலெட்சுமி மாதிரியுள்ள உன்னை குறைகூறி மறுத்துவிட்டார்களே. மாப்பிள்ளைமாருக்கு தவறுகள்பிழைகள் விட்டாலும் அதுவும் தெரிந்து பிழைகள் விட்டாலும் அவர்களுக்கு மேலதிக நன்னடத்தைச் சான்றிதழ்களைச் சமூகம் வழங்குகிறது. என்று கோபத்துடன் ஏசினாள். ஜேர்மனியில் எட்டுவருடம் இருந்தாரென்றால் அங்குள்ள பண்பாட்டை, உலக அறிவை அவர் அறியவில்லையா? அனுபவிக்கவில்லையா? காணவில்லையா? பெண்களுக்கு அவர்கள் காட்டும் சமத்துவம் மரியாதை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்பவற்றைப் பார்க்கவில்லையா? எனக் கொதித்தாள். மாலதி ஏன் கோவப்படுகிறாய்? என் தலைவிதி இப்படியிருக்கும்போது அதைப்பிரமனாலும் அழித்தெழுத முடியாது. இல்லை ரேணு பிரமன் எழுதியதாகப் பலவற்றையும் ஏன் எல்லாவற்றையுமே எம் சமுதாயம் செய்துவிட்டு பிரமனைச் சாட்டுக்கு இழுக்கிறது. உனக்குத் தெரியாது. ஏன் என் கணவரும் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனியிலிருந்து உழைத்தவர் என்று உனக்குத் தெரியும் தானே? அவர்தான் எல்லாம் முன்பு சொல்லியிருக்கிறார். ரேணு எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் பிழை செய்கிறார்கள்தான். அது சிலவேளை பலாத்காரம், அறியாப்பருவம், விதி, தலையெழுத்து, அது இது என்றிருக்கலாமல்லவா? தற்செயலாக நடந்த ஒன்றுக்கு ஒரு பெண்ணானவள் ஆயுள்த் தண்டனை பெற்ற கைதிபோல தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமா? எத்தனையோ காதலர்கள் திசைமாறி வேறு திருமணம் செய்யவில்லையா? இன்னும் அருமையாக விதவைப் பெண்களை சில ஆண்கள் திருமணம் செய்யவில்லையா? என்று யோசித்துப்பார். மேலும் சொன்னால் திருமணமாகிய பின் கணவனில்லாத வேளையில் மனைவியை யாரோ ஒருவன் வந்து களங்கப்படுத்திச் சென்றுவிட்டான் என்றால் அக்கணவன் மனைவியை வெறுப்பானா? அல்லது களங்கப்படுத்தியவனைக் கொல்ல வாளைத் தூக்குவானா? எதைச் செய்வான்? வாள்தான் தூக்குவான். அப்படியென்றால் அந்த இடத்தில் மனைவி களங்கப்பட்டவள் என்று அவன் நினைப்பதில்லையே. அவள் களங்கப்படவில்லையா? ஒரு பெண்ணுக்கு கல்யாணத்திற்குப்பின் தவறுதலாக ஏதும் நடந்தால் களங்கப்படாதவள், கற்பைக்காக்கப் போராடினாள் என்று யார் சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக நோக்கினால் கல்யாணத்திற்கு முன்போ, பின்போ தவறினால் இரு நிலையிலும் பெண் களங்கப்பட்டிருக்கிறாள் என்பது முடிவாக இருக்கும்போது முன்னுக்கொரு மாதிரியாக, பின்னுக்கொருமாதிரியாக சமுதாயம் பெயரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. என்று ஏசிய மாலதி நீ ஒன்றுக்கும் கவலைப் படவேண்டாம். உனக்கு நல்ல வாழ்க்கை அமையும். ரேணு ஒரு விடயம் உன்னுடன் கதைக்க வேண்டியுள்ளது. நீ என்ன நினைப்பாயோ தெரியாது. உனக்கு விருப்பமென்றால் நான் செய்வேன். அல்லாவிட்டால் விட்டுவிடுவேன். உனது பிரச்சனைகள்பற்றி எனது ஒன்றுவிட்ட அண்ணனுக்கு அடிக்கடி சொல்வேன். அவரைப்பற்றி முன்பும் உனக்குக் கூறியிருக்கிறேன். அவர் கடையொன்றில் வேலை செய்கிறார். நல்ல மனம் படைத்தவர். அவர் தனக்குக் கல்யாணம் வேண்டாமென்று பிடிவாதமாக இருக்கிறார். அவருக்கு இடையில் ஏற்பட்ட கோளாறினால் ஒரு கால் ஊனம். இதனால் தனக்குக் கல்யாணம் வேண்டாமென்று சொல்லிவிட்டார். நீ சம்மதித்தால் நான் அவரை வழிக்குக் கொண்டுவருவேன். அது உன் சொந்த விருப்பம். இப்படிக் கேட்கிறேன் என நினைக்காதே. அவரும் பாவம். அவர் வேண்டாமென்று இருந்தாலும் அவருக்கு ஒரு துணை தேவையென நான் கவலைப்படுவேன். உன்னையும் நினைத்து நான் கவலைப்படுவேன். இது இணைந்தால் இரண்டு



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவலையும் எனக்கில்லை. என்று மாலதி கூறி முடிக்குமுன்..... ரேணுகா அழுதுகொண்டு மாலதி நீ சொன்னதை நான் ஏற்கவேணுமா? என்றாள். அப்போது மாலதி இது உன் விருப்பம் எப்படியோ? அப்படியே செய். உன்முடிவைப் பொறுத்தது என்றாள். இல்லை இல்லை மாலதி உன் அண்ணாவும் பெண்பார்க்க விரும்புவார். ஏனென்றால் அவரும் ஆண்மகன்தானே. நான் சம்மதிப்பேன். வீட்டார் அவரைப் பார்த்துவிட்டுச் சம்மதிக்க மாட்டார்கள். அதற்காகத்தான் பின்னிற்கிறேன் என்றாள். அதற்கு மாலதி அவர் பெண் பார்க்க வேண்டிய அவசியமில்லை. நான் சொன்னால் சரி என்றாள். எத்தனையோ ஆண்கள் வந்து என்னைப் பார்த்து... கோவில் மாட்டைப் பார்ப்பது போல் பார்த்து.... சீதனம் பேசிப்பேசி ... இதுவரை சென்றுவிட்டனர். என்னையே பார்க்காமல் ஒரு உயிர் என்னைக் கல்யாணம் செய்ய உடன்படுமானால் அந்த உயிருக்கு என்னுயிரை அர்ப்பணிப்பேன். இரண்டு தைரியமான கால்களில் நின்றுகொண்டு மனம் ஊனமுற்ற ஆடவரை மணப்பதிலும் பார்க்க சாதாரண கால் ஊனமுற்றவரை மணப்பது ஆயிரம் மடங்கு சிறப்பானது. இன்று நாட்டில் எத்தனையோ தியாக உள்ளங்கள் போரினால் உறுப்புகள் ஊனமுற்று வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்கவேண்டாமா? எத்தனையோ பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இனி வாழக்கூடாதா? மாலதி எமக்குப் பிறக்கும் குழந்தையும் ஒற்றைக் காலுடன்தான் பிறக்குமா? இல்லையே. அவருக்கு அது இடையில் ஏற்பட்ட கண்ணுக்குத் தெரியக்கூடிய ஊனம். எனக்கோ...என் உடம்பிற்கு கண்ணுக்கு தெரியாத குறை என்று சமுதாயம் சூட்டிய ஊனம். அப்படித்தானே என்றாள் ரேணு.

ரேணுகா தன் வாழ்க்கையை ஒரு தியாகச்செம்மலுக்கு அர்ப்பணித்து அவனுக்கு ஊன்றுகோலாகப்போய் நிற்கப்போகிறாள். இனி இந்த மூடச்சமுகம் என்ன சொல்லி அவளை வாய்க்குள் அசைபோடப் போகிறது?

---

நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்வதற்கு அடுத்த படியாக, நல்ல நூல்களைத் தேடிக் கொள்ளல் இனிது,

—கோல்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீரகேசரிச் செய்திகள்.

3.6.88

முல்லைத்தீவுப் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் தொடர்ச்சியான தேடுதல் வேட்டை நடைபெறுகிறது.

கட்டுநாயக்க இராணுவ முகாம் தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட 17 பேர்களில் இரு யுவதிகள் உட்பட 10 சந்தேக நபர்கள் பிணையிற் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

யாழ்-கொழும்பு பயணிகள் மீதான சோதனை மீண்டும் தீவிரம். மாங்குளம், வவுனியா தடுப்பு முகாம்களிலிருந்து வயோதிபர் பெண்கள் உட்பட அனைவரும் பொதிகளுடன் நீண்ட தூரம் நடக்க நேரிடுகிறது.

4.6.88

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கினால் 30,000 பேர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கோயிற்புளியங்குளம், நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

5.6.88

முல்லைத்தீவுக்கு மேலும் 300 டிரக்குகளில் இந்திய இராணுவத்தினர் சென்றுள்ளனர். 15,000 வரையிலான இந்தியத் துருப்புகள் நிலைகொண்டுள்ளதாகவும், நெடுங்கேணிப்பகுதியில் முகாமிட்டு தேடுதல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் பதில் நீதவான் திரு வில்வராஜா இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

6.6.88

முதற்கட்டமாக திருமலையிலிருந்து 2,500 இந்தியத்துருப்புகள் வெளியேறுவர். - இலங்கைப் பாதுகாப்பு அதிகாரியை மேற்கோள் காட்டி "ராய்ட்டர்" செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக பீரங்கி, டாங்கிப் படைப்பிரிவினரே வெளியேறவுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூஸா, பெல்வத்த முகாம்களிலிருந்து விடுதலையான 132 இளைஞர்களுக்கு எகெட் நிறுவனம் சுயதொழில் வேலைவாய்ப்புக்கென 2,60,000 ரூபாயை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் வைத்தியர்கள் தட்டுப்பாடு. நான்கு வைத்தியர்கள் பணிபுரியவேண்டிய இடத்தில் ஒருவரே பணிபுரிகிறார்.

7.6.88
இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பொலிகண்டியைச் சேர்ந்த அருணசலம் சிவலிங்கம் 5.6.88 காலமானார்.

27.5.88ல் இந்தியப் படையினரால் ராஜ்குமார் நாவற்குழியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். பின்பு யாழ் வைத்தியசாலையில் இவரைப் பிணமாக ஒப்படைத்தனர்.

8.6.88
இந்தியத் துருப்புகளின் ஒருசிறு பிரிவு 7.6.88ல் திருமலையிலிருந்து சென்னை திரும்பியது. இந்தியப்படையின் விலகல் தென்மாகாண மக்களைத் திருப்திப்படுத்தும் வெளிப்புச்சென சபையில் அமரா கூறினர்.

மட்டுநகர் பிரசைகள்குழுத் தலைவர் வணபிதா சந்திரா பெர்னண்டோ திங்கட் கிழமை மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

9.6.88
பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து பிதா சந்திரா பெர்னண்டோவுக்கு இறுதியஞ்சலி செலுத்தினர். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன, மத பேதமற்ற சேவைக்கு புகழ் மாலையும், துக்க அனுஸ்டானமும் செய்யப்பட்டது.

10.6.88
தமிழ் நாட்டின் கல்வி நிலையங்களில் இலங்கைத் தமிழ்மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான தடைஉத்தரவை ஒரு வருடத்திற்கு இடைநிறுத்துவதென இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பகுதியில் பரவிவரும் வயிற்றோட்ட நோய் காரணமாக 15 வயதிற்குட்பட்ட 10 சிறுவர்களும், குழந்தைகளும் இதுவரை பலியாகியுள்ளன.

11.6.88
வவுனியாவில் இயக்கமோதல் காரணமாக தம்பித்துரை சுதாகரன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியத்தூதரகத்திற்குள் நுழைந்து மனுக்கொடுக்க முனைந்த 60 தமிழ்வாலிபர்கள் பிரெஞ்சு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டார்கள்.

13.6.88
கிழக்கில் ஆயுதபாணிகளின் கொள்ளைகள் அதிகரித்துள்ளன.

14.6.88
மட்டக்களப்பு மாவட்டத்தில் வங்கிகள்மீதான சிவில் நிர்வாகத்தடையை புலிகள் தளர்த்தியதை அடுத்து வங்கிகள் திறக்கப்பட்டபோதும் மாற்று இயக்க வாலிபர்களால் அச்சுறுத்தப்பட்டு திரும்பவும் மூடவைக்கப்பட்டுள்ளன.

15.6.88
வடக்குக்கிழக்கில் அமைதியைத் தோன்றச்செய்ய தமிழ் அமைப்புகள் அனைத்தினதும் மகாநாட்டைக் கூட்டும்படி இந்தியத் தூதுவர்மூலம் மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

12.6.88
ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணங்களின் தேர்தல்கள் முடிவடைந்திருப்பதால் எஞ்சிய இரு மாகாணங்களான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் ஏற்பாடுகளில் அரசாங்கத்தின் கவனம் இப்பொழுது திரும்பியுள்ளது. இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையையும் பெற்ற இந்த ஏற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

அராலித்துறையில் இந்தியப்படையினர் புதிதாக முகாமொன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் இரவு நேரங்களில் மீன்பிடிக்கத் தடையும் விதித்துள்ளனர். இதனால் 25 மீனவக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அராலித்துறையில் மீனவர்கள் தங்கும் மட்டத்திலேயே பெருந்தொகையான இந்தியப்படையினர் முகாமிட்டுள்ளனர்.

17.6.88
ஆரையம்பதி, கரத்தாள்குடி அடங்கிய பிரதேசம் நேற்றுக்காலைமுதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இந்திய இராணுவத்தால் தேடுதல் நடாத்தப்பட்டது.

பதிவுத்தபால்மூலம் அரசாங்க அதிகாரிகளுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் உயிருக்கு அச்சுறுத்தல் தெரிவிக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதையடுத்து மூல்லைத்தீவுக் கச்சேரியும், வங்கிகளும் இயங்கவில்லை.

18.6.88
பதுளையில் கடந்த மாதம் 21ம் திகதி சுடப்பட்டுக் காயமுற்ற சுதந்திரக்கட்சி ஆதரவாளரும் ஆசிரியருமான எஸ்.எச்.எம்.செரீப் செவ்வாய்க்கிழமை கொழும்பு ஆஸ்பத்திரியில் காலமானார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென் மாகாணசபையின் ஐ.தே.கட்சி உறுப்பினரான திரு எஸ்.மகலால் வீரசிங்கவும், அவரது வேலைக்காரரும் 14.6.88அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வனுகம்வெகரவில் ரோந்துசென்ற பொலிசார்மீது தென்பகுதித் தீவிரவாத இயக்கத்தினர் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

வவுனியா சாஸ்திரி கூளாங்குளத்தில் வியாழக்கிழமை இப்பகுதியைச் சுற்றிவளைத்த இந்தியப்படையினர் இப்பகுதி இளைஞர்களை அருகிலுள்ள பாடசாலைகளுக்கு வருமாறு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

19.6.88
கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிவந்த லொறியொன்று வவுனியா மதவாச்சி வீதியில் வைத்து ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்றினால் இடைநிறுத்தப்பட்டு சுமார் இரண்டரை இலட்சம் பெறுமதியான உணவுப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

20.6.88
யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு நடவடிக்கைகளும், சிவில் நிர்வாகத்தை இடம்பெறச் செய்யும் நடவடிக்கைகளும் எட்டிக்குப் போட்டியாக இடம்பெறுவதால் இங்குள்ள வங்கிகளின் ஊழியர்கள் திரிசங்குசொர்க்க நிலையிலுள்ளனர்.

கக்கமனையில் உடுப்பில்லகொடை என்னுமிடத்தில் சனிக்கிழமை இரவு ஐக்கிய சோசலிச முன்னணி ஆதரவாளரான டபிள்யூ.வீரசிங்க குலதுங்கா என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளவத்தையில் இரு கோட்டல்களில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட 21 தமிழ் வாலிபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களனைவரும் யாழ்ப்பாணம், வடமராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களென்றும் கொழும்புக்கு வந்ததற்கு தகுந்த காரணம் கொடுக்கவில்லையென்றும் வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி லலித் லேகமகே தெரிவித்துள்ளார்.

23.6.88
மட்டக்களப்பில் சிவில் நிர்வாகத்தடை நீக்கப்பட்டதையடுத்து கச்சேரி, வங்கிகள் மீண்டும் வழமைபோல் இயங்கத் தொடங்கியுள்ளன.

நேற்று யாழ் கந்தர்மடமருகில் இளைஞர் ஒருவரின் சடலம் சூட்டுக்காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது. இவர் ஜீவகுமார் (வயது 20) என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது.

வடக்குக் கிழக்கில் "தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்" இயங்குவதற்கு விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

24.06.88
போர் நிறுத்தத்துக்கும் முன்வருமாறு கோரி ஈரோஸ் இயக்கம் 23.06.88 ஏறாவூரில் நடாத்திய வீதி மறியல் போராட்டத்தை இந்தியப் படையினரும், அவர்களுடன் வந்த சில இளைஞர்களும் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிச்சூடு நடத்திக் குழப்பினர்.

26.06.88
சென்னையில் இந்திய அரசாங்க அதிகாரிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் சமரசப் பேச்சு வார்த்தைகளில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் மிக விரைவில் ஒரு இணக்கம் ஏற்படலாம் எனவும் அரசியல் இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

27.06.88
கடந்த மாதம் 22ம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய இராணுவ முகாம்களும், இராட்சத கெலிக்கொப்ரர்களும் கண் மூடித்தனமாக மக்கள் வாழும் பகுதிகளை நோக்கியும், இயற்கை வளமிக்க காடுகளை நோக்கியும் சராமரியாக 250 கிலோ எடையுள்ள குண்டுகளையும், சர்வதேச ரீதியில் மனித குலத்துக்கு தீங்கு விளைவிக்கும் என்று தடை செய்யப்பட்ட இரசாயனக் குண்டுகளையும் போட்டுள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள், பாடசாலைகள் என்பன சின்னாபின்னமாக்கப்பட்டதுடன் காடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

28.06.88
ஆயுதங்களை கீழே வைக்கவும், இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள். எனவே வடக்கு, கிழக்கில் அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டு வடக்கு, கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு ராஜீவ் காந்திக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி அரசியற்குழு உறுப்பினரும், இலங்கை தொழிற்சங்க சம்மேளன உறுப்பினருமான எஸ்.டபிள்யூ. பண்டித இனம்தெரியாத நபரால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவில் இரண்டு இயக்கங்களுக்கிடையிலான மோதல் தொடர்ந்து நடந்து வருகிறது. 26.06.88ல் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். 7 பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

30.06.88
மலையகத்தின் பல பகுதிகளிலிருந்தும் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

தென்ருசிய நிறுவன செய்திப் பிரிவு

இலண்டன் தமிழ்த் தகவல் நிலையத்தின் நிர்வாகியான கே.கந்தசாமி யாழ்ப்பாணத்தில் வைத்து 19.06.88ல் ஈரோஸ் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டார்.இவர் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினதும்(ரிஆர்ஆர்ஓ), தீபம் ஆராய்ச்சி நிறுவனத்தினதும் அங்கத்தவராவார்.இவர் கடத்திச் செல்லப்பட்டதும் சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல சர்வதேச மனித உரிமைச் சங்கங்கள் இவரை விடுவிக்கும்படி பல வேண்டுகோள்களை விடுத்திருந்தன.

03.07.88 பில்ட் அம் சொன்ராக்

மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு.ஸிம்மர்மன் இங்கு வாழும் 27,000 தமிழர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்பப் போவதாக தெரிவித்தார்.தமிழர்கள் திரும்பிப் போகும்படி கேட்கப்படுவார்கள் என்றும், அப்படிப் போகாத பட்சத்தில் பலவந்தமாக திருப்பியனுப்பப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.இப்படித் திரும்பிப்போக விரும்பும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 300 டி.எம் வழங்கப்படும்.இத் திட்டத்திற்கு பிரதம மந்திரி கோல்,வெளிநாட்டமைச்சர் கென்சர் இருவரும் இணங்கியுள்ளனர்.இதற்குச் செலவாகும் தொகை 20 மில்லியன் மார்க்குள்.இதுபற்றி உள்துறை அமைச்சைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் விபரிக்கையில் இத் தொகை தற்போது தமிழர்களுக்கு வழங்கப்படும் சகல சமூக உதவிகளுக்குமான தொகையை விடக் குறைந்ததென்றும்,தமிழர்கள் தொடர்ந்தும் இரண்டு வருடங்கள் இங்கே இருந்தால் அவர்களுக்கு 200 மில்லியன் மார்க்குள் செலவாகும் என்று குறிப்பிட்டார்.இது பற்றி மேலும் அவர் தெரிவித்தது இலங்கையில் தமிழர்களுக்கு எந்தவித அரசியற் தொல்லைகளும்,பிரச்சனைகளும் இருக்கமாட்டாது என்பதால் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் சம்மேளனச் செயலாளரும் இத் திட்டத்துக்கு ஆதரவளித்துள்ளார்.

தமிழாக்கம் : ஜோர்ஜ் டயஸ்

05.07.88 பிராங்பேர்ட்டர் றுண்ட்செள

சமஉக்டி உள்துறை அமைச்சர் திரு.ஸிம்மர்மன்னின் 'தமிழர்களை திருப்பியனுப்பும்' திட்டம் எஸ்பிடி கட்சியினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.ஆளும் கட்சிப் பிரிவின் எஸ்பிடி உள்துறை அரசியற் பேச்சாளர் திரு.புகார்க் கியேஉக் இக் கட்டாயத் திருப்பியனுப்புதல் குறித்து எச்சரிக்கை விடுத்ததோடு தமிழர் வேட்டை ஒருபோதும் நடைபெற மாட்டாது எனக் குரல் கொடுத்துள்ளார்.தென்ருசிய நாடுகளில் அரசியற் கொடுமைகள் எதுவும் இனிமேல்

www.tamilarangam.net

என்றதொரு நிலை வந்தாலும் அப்போதும்கூட சுய விருப்பத்திலேயே நாடு திரும்பலாம் என்றும் தெரிவித்தார். யூ.என்.சி.எச்.ஆர் இன் சம்மதத்துடனேயே இத் திட்டம் உருவானதென திரு.ஸிம்மர்மன் தெரிவித்துள்ளார். சாதாரண நிலையை அடையாத போதிலும் இலங்கையில் அமைதி தோன்றியுள்ளது. மனிதாபிமான நோக்கிலேயே இத் திருப்பியனுப்பும் திட்டம் உள்ளது. மிகச் சிறிய பகுதியைத் தவிர இனப்போரின் எதிரொலியாக ஏனைய இலங்கையர்கள் அகதிகளாகத் தஞ்சம் கோரும் உரிமையைப் பெறும் வாய்ப்பற்றவர்கள் எனவும் சமஉ்டி உள்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழாக்கம் : பீற்றர் ஜெயரட்னம்

07.07.88 தி வெல்ற்
தமிழர்களைத் திருப்பியனுப்பும் ஸிம்மர்மன்னின் திட்டத்தை எஸ்பிடி கட்சி நிராகரித்துள்ளது. இலங்கையின் சகல பகுதிகளிலும் பூரண அமைதி வரும்வரை பிறீமன், சிலெஸ்விக் கோல்ஸ்ரைன், சார்லாண்ட், நோர்த்றைன் வெஸ்ற்பாலியா மாநிலங்களிலிருந்து தமிழர்கள் திருப்பியனுப்பப்பட மாட்டார்கள் என்று எஸ்பிடி கட்சிப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஸிம்மர்மன்னின் திட்டத்தை தி குறூன் கட்சியும் வன்மையாகக் கண்டித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

(விற்றன் நகர சட்டத்தரணி திரு.லோதர் கின்னினால் வெளியிடப்பட்டு, விற்றன் பொதுநல்நிலைய தமிழ்ப் பிரிவினால் தமிழாக்கம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட பிரசுரம் இங்கே மறுபிரசுரமாகியுள்ளது.)

03.07.88 தொலைக்காட்சிச் செய்திகளிலும், 04.07.88 பத்திரிகைச் செய்திகளிலும் வெளியான திரு.ஸிம்மர்மன்னின் 'தமிழர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்' தொடர்பான அறிக்கை சம்பந்தமாக திரு.லோதர் கின்னின் விளக்கம்

மேற்கு ஜேர்மனி மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சர் திரு.ஸிம்மர்மன் "தாங்களாக இலங்கைக்குத் திரும்பிப் போவதாகப் பகிரங்கப்படுத்தும் தமிழ் அகதிகளுக்குச் சலுகைப் பணமாக குடும்பம் ஒன்றுக்கு சுமார் 300டி.எம் வழங்குவேன்" என்று தெரிவித்துள்ளார். இப்படி வழங்கும் சலுகைப் பணத்தைப்

www.tamilarangam.net

பெற்றுக்கொள்ளாதவர்கள் பலவந்தமாக அவர்களுடைய தாய்நாட்டிற்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் என்று அவர் மிரட்டியுள்ளார்.

உண்மையில் முற்றிலும் தீவிரமான கட்டுப்பாட்டு நடவடிக்கையைக் காட்டிலும் குறைந்ததல்லதான இந்தச் 'சலுகைப் பணத்தை' யாரும் பெற்றுக் கொள்ளத் தேவையில்லையென்பதை நான் ஆணித்தரமாக வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். இப்படிச் செய்யத் தேவையில்லை ஏனெனில் தனது மிரட்டல் உத்தேசங்களைச் செய்யத் திரு.ஸிம்மர்மன்னுக்கு அதிகாரமில்லை.

அரசியல் தஞ்சம் கோரிய தமது விண்ணப்பத்தை இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் எவரும் நிச்சயமாகப் பயப்படத் தேவையில்லை. இவர்களுடைய விண்ணப்பங்கள் முற்றுப் பெறாத நிலையில் மேற்கு ஜேர்மனியை விட்டுப் போகும்படி இவர்களை யாரும் பலவந்தப்படுத்த முடியாது. சில நீதிமன்றங்கள் அரசியல் தஞ்சங்களை மறுபடி ஏற்றுக் கொண்டிருப்பதும், இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதிகளின் அரசியல் தஞ்சங்களை ஏற்றுக் கொண்டு சமஷ்டி நீதிமன்றம் சில முடிவுகளை வெளியிட்டிருப்பதும் சில முன்னேற்றமான அடையாளங்களாகும். கார்ல்ஸ்ரூ க சமஷ்டி அரசியலமைப்பு நீதிமன்றத்திலுள்ள தமிழரின் விண்ணப்பங்கள் தொடர்பாக நீண்ட காலமாக எந்த முடிவும் வெளியிடப்படாமையும் நல்ல மாற்றங்கள் ஏற்படலாம் என்ற நம்பிக்கையை இன்னும் உண்டாக்குகிறது.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்வர்களும் பயப்படத் தேவையில்லை. முடிவு எப்படியிருந்தாலும் அவர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்புவது திரு.ஸிம்மர்மன் அல்ல. அவரால் அப்படிச் செய்யவும் முடியாது. இது மாநில அரசாங்கங்களிலேயே முடிவு செய்யப்படும். டுசில்டோர்விலுள்ள நோர்த்றைன் வெஸ்ற்பாலியா மாநில அரசாங்கம் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவதில்லை என்ற தனது கருத்தில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது எனத் தெளிவாக்கியுள்ளது.

ஆகவே திரு.ஸிம்மர்மன்னின் பிரகடனத்தால் யாரும் ஆத்திரமடையத் தேவையில்லை. பயப்படுவதற்கும் எந்தக் காரணமும் இல்லை.

தமிழாக்கம்: விற்றன் பொதுநூல்நிலையத் தமிழ்ப் பிரிவு
04.07.88



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

சீர்திருத்தப் பாதையில் செல்வோருக்கு வழிகாட்டியாக அமைந்தது "வீண் கொண்டாட்டம்". இதைப் படித்தவர், அறிந்தவர் நடைமுறைப்படுத்துவார்களா என்பது கேள்விக்குறி. தாய் நாட்டுச் செய்திகள் வர வரக் குறுகிப் போவது ஏனோ?

ஷூப்பெற்றல் — தயான்

"வீண் கொண்டாட்டங்கள்", "அந்நியமாதல்" ஆகிய இரண்டு கட்டுரைகளும் 'ஏ—வன்'. முதலாவது கட்டுரை சம்பந்தப்பட்டவர்களுக்கு சாட்டையடியாக அமைந்திருந்தது. அவற்றை எழுதியவர்களுக்கு நன்றிகள்.

றெம்சைட் — புவனேந்திரன்

ஒவ்வொரு மாதமும் பிரதியாக்குவதற்கு முன்பே நீங்கள் எழுத்து, வசனப் பிழைகளை அவதானித்து திருத்த வேண்டியது அவசியம். வளரும் இளைஞர்கள் தூண்டிலைப் படிக்கும்போது இத் தவறுகள் அவர்களுக்கு ஏற்படப் போகும் மொழி அறிவில், அபிவிருத்தியில் சில எதிர் மறைவான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். அத்துடன் நமது மொழி அபிவிருத்தியில் நமக்கிருக்கும் சோம்பல்தனத்தை நாமே வெளிப்படுத்துவதாக அமையுமென்பதுடன், தென்றெசிய நிறுவனத்திலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்ச் சஞ்சிகை இத் தவறுகளுடன் வெளிவருவதை யாரும் விரும்ப மாட்டார்கள். தயவு செய்து தூண்டில் ஆசிரியர் குழுவும், ஆக்கங்களைப் படைப்பவர்களும் எழுத்து, வசனப் பிழைகளை இனிவரும் பிரதிகளில் ஏற்படாவண்ணம் கவனம் செலுத்துவீர்களென நம்புகின்றேன்.

காடெக்ஸன் — குணரத்தினம்

தமிழரின் தனி. மனித, சமூக விடுதலைக்கு தங்கள் சஞ்சிகையின் ஆக்கமிகு கருத்துகள் பெரும் பங்களிப்புச் செய்யுமென்று எண்ணுகிறேன்.

ஒஸ்னபுறாக் — ஜெயசேகரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய ஆக்கிரமிப்பும் எமது போராட்டமும்

இந்திய இராணுவம் தொடுத்துள்ள யுத்தத்தினுல் எமது மக்கள் பெரும் துன்பங்களை முகம் கொடுத்த வண்ணமுள்ளனர். இலங்கை அரசின் பாசிச ஒடுக்கு முறையினுல் ஒடுக்கப்பட்ட எமது மக்கள் இந்திய இராணுவம் வந்து இறங்கியதும் 'விடிவு' கிடைத்துவிட்டது என்றெண்ணினர்கள். ஆனுல் நிலைமை வேகமாகவே தலைகீழாக மாறிவிட்டது. இலங்கை இராணுவம் கட்டவிழ்த்துவிட்ட கொடூரங்களை விஞ்சுமளவிற்கு இந்திய இராணுவம் ஆட்டம் போட்டது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சித்திரவதை என்று எமது நாட்டை சேருடி எமது மக்களை எமது மண்ணிலேயே அகதிகளாக்கியது. இன்றும் இந்திய, இலங்கை பாசிச அரசுகள் 'அமைதி' நிலவுவதாகக் கூறிக்கொண்டாலும் உண்மை நிலை மாருகவே உள்ளது. தொடரும் அக்கிரமங்கள், ஒடுக்குமுறைகள், உணவுத் தட்டுப்பாடு, சிவில் நிர்வாகத்தடை போன்றவற்றிற்கு பஞ்சமேயில்லை.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜனநாயக அரசு எனக் கூறிக் கொள்ளும் இரண்டு பாசிச அரசுகள் ஒன்ருக இணைந்துள்ளன. இவ் விணைவை சர்வதேச நாடுகள் பலவற்றின் அரசுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இதைவிட இவற்றிடம் ஆயுத பலமும் பெரிதாகவே உள்ளது. வெளிப்படையாகவும், இரகசியமாகவும் உள்ள 2 இலட்சத்துக்கு மேற்பட்ட துருப்புகளை எமது மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (படைவிலகல் என்று கூறி 250 இராணுவத்தினரை இந்தியாவுக்குத் திருப்பியழைத்து இந்திய அரசு நாடகமாடியது.) இலங்கை அரசிடம் இருந்ததைவிட பலமடங்கு அதிகமாக உள்ள கனரக ஆயுதங்களை இந்தியா வடக்கு, கிழக்குப் பகுதியில் குவித்துள்ளது. சீரழிந்த விருதலை இயக்கங்களை தனது உளவு நடவடிக்கை உட்பட ஐந்தாம்படை வேலைகளுக்காக இந்திய அரசு தம்முடன் வைத்திருக்கிறது. இது போன்ற இன்னும் பல விடயங்களில் எதிரியின் நிலை பலமாகவே உள்ளது.

தமிழ் மக்களுக்காகப் போராடப் புறப்பட்ட இயக்கங்கள் யாவும் இப்போது சீரழிந்து போயுள்ளன. ஆயுதங்களையும் இந்திய அரசிடம் கையளித்துள்ளன. இந்திய இராணுவத்தின் ஐந்தாம்படையாக வேலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயல்படுவதற்கு இந்தியாவின் அனுமதியுடனேயே சில ஆயுதங்களை வைத்துக் கொண்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றன. இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட குழுக்களாக இயங்கும் இயக்கங்கள் இந்திய அரசு தங்களுக்குத் தரும் பிச்சையைக் கூட்டித் தரவேண்டும் என்பதற்காக சில சிலசமயம் முரண்படுவதுபோல் கோரிக்கைகள், அறிக்கைகள் விடுகின்றன. அது மட்டுமன்றி சலுகைகள் பெறுவதற்காக பாசிச ஜே.ஆருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட நாயாய் அலைகின்றன. ஆரம்பத்திலிருந்தே முற்போக்குச் சக்திகள் ஒவ்வொரு பின்னடைவின் போதும், இயக்கங்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அராஜகங்களினாலும் நசுக்கப்பட்டதால் இன்று அவர்கள் பலம் குன்றிய சக்திகளாகவே உள்ளனர். இருப்பினும் நம்பிக்கைக்குரிய அசைவுகள் இருக்கத்தான் செய்கின்றன. எதிர்காலத்தில் கடந்தகால அனுபவத்தைக் கொண்டு சரியான வழியில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என நம்பலாம்.

இந்திய அரசு தனது திட்டங்களை வெகு சுலபமாக நிறைவேற்றலாம் எனக் கனவு கண்டது. ஆனால் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டன. இதுகாலவரையும் பல வழிகளைக் கையாண்டும் கூட இன்னமும் அது நிறைவேறாமலே உள்ளது. முதலாளித்துவம் எப்படித் தனக்குள்ளே முரண்பாடுகளைக் கொண்டுள்ளதோ அதே போல பிற்போக்குச் சக்திகளும் தமக்குள்ளே முரண்பாடுகளை கொண்டிருக்கின்றன. இப் பிற்போக்குச் சக்திகளுக்கிடையான முரண்பாடே இன்று எதிரி தான் நினைத்தவற்றை எமது நாட்டில் நிறைவேற்றிக்கொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணம். மாறாக படிப்படியாக மக்கள் உணர்வூட்டப்பட்டு இந்த பிற்போக்குச் சக்திகளை எதிர்க்க முன்வரும்போது இவர்கள் ஒன்றுபட்டுவிடுவார்கள். இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மக்கள் விரைவிலேயே தம்மை எதிர்ப்பார்கள் என்பதை இவர்கள் கணித்துக்கொண்டு தமது முரண்பாடுகளை பேச்சுவார்த்தை என்ற போர்வைக்குள் இருந்து பேரம் பேசலின் மூலம் தீர்த்துக் கொள்ள முனைகிறார்கள். பேரத்தில் உள்ள இழுபறியினாலேயே இன்றையநிலை தொடர்கிறது. எது எப்படியோ இந்த இழுபறி ஒரு சில விட்டுக் கொடுப்புகளுடன் முடிவுக்கு கொண்டுவரப்படும் போது அதாவது 'பேச்சுவார்த்தை' வெற்றியளிக்கும்போது ஒரு நாடகம் அரங்கேற்றப்படும். அந்த நாடகம் இடைக்கால அரசாங்கமும், மாகாண அரசாங்கமுமாக அமையக்கூடிய வாய்ப்புகள் முன்பு இருந்தன. இப்போது இடைக்கால புனர் நிர்மாணக்குழு, பின்பு மாகாண அரசு எனப் பேசப்படுகிறது. இந்தப் பேரமும் சரிவராவிட்டால் இன்னும் ஒருசில விட்டுக் கொடுப்புகளுடன் புதிய நாடகம் அரங்கேற்றப்படும்.

இந்தப் போராட்டத்தில் நாம் மிகப் பெரியதொரு தோல்வியைத் தழுவியுள்ளோம். ஆனால் இது நிரந்தரமானதொன்றல்ல. இதற்கான காரணம் ஆராயப்பட வேண்டும். இதன் அக, புற சூழ்நிலைகள் ஆரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யப்படாவிட்டால் நாம் முன்னேக்கிய அடுத்த அடியை வைக்க முடியாமல் போய்விடும். இந்திய அரசு தெற்காசியாவில் தான் ஒரு நாட்டாண்மை என்பதை நிருபிக்க முயன்றுகொண்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியமே ஜப்பானின் வளர்ச்சியால் பல சந்தைகளை இழந்துள்ள இவ்வேளையில் இந்திய ஏகாதிபத்தியம் குறைந்த பட்சம் தெற்காசியாவிலுள்ள சிறிய நாடுகளிலாவது தனது சந்தையை உத்தரவாதம் செய்ய முனைகிறது. இத ஞல் தெற்க்காசியாவில் தன்னை ஒரு நாட்டாண்மை நிலைக்கு வளர்த்துக் கொள்ள விரும்புகிறது. ஏகாதிபத்தியங்களுக்கே உரித்தான குணும்சங்களை அதாவது அண்டைநாடுகளுக்கெதிரான சதி, ஊடுருவல், உளவு பார்த்தல் போன்ற சகலதையும் இந்தியா செய்து வருகிறது. விடுதலை இயக்கங்கள் இந்தியாவை தாம் பாவிக்கிறேம் என எண்ணிக் கொண்டிருந்த வேளை இந்தியா தனது ஊடுருவலுக்கான தயாரிப்பாகவே இயக்கங்களைக் கை யாண்டது.

இலங்கை அரசின் தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறை சர் வதேச அரங்கில் அம்பலமாகி கண்டிக்கப்பட்டிருந்தது. பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்தது. சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்திருந்த நாடுகள் தாம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அமைதியைக் கொண் டுவர நிர்ப்பந்தித்தன. இந்நிலையில் இராணுவ ரீதியாகப் போராளிகளை ஒடுக்கி அமைதியைக் கொண்டு வரலாம் என்றும் அதற்கு மேற்குலகுநாடு கள் ஆதரவு தரும் என்றும் நம்பி இலங்கை அரசு 'ஒப்பிரேசன் லிபரே சன்' தாக்குதலைத் தொடங்கியது. அந் நேரத்தில் இந்தியா தனது 'மிராஜ் ராஜதந்திரம்' (விமானம் மூலம் உணவுப் பொதிகளை போட் டமை) மூலம் இலங்கை அரசை மிரட்டியது. இந்த ராஜதந்திரம் சர்வ தேச ரீதியில் ஆதரவைப் பெற்றது. இலங்கை அரசை இந்தியாவின் நிர்ப் பந்தத்திற்கு அடிபணிய வைத்தது. இந்தக் காலகட்டத்தில் இலங்கையின் எஜமானஞன அமெரிக்கா இந்தியாவைப் பகைத்துக் கொள்ள விரும்பவி ல்லை. ஏனெனில் இப்போது இந்தியாவில் அமெரிக்கப் பொருட்களுக்கு சந்தை திறந்து விடப்படுவதாலும் பொருளாதார ரீதியாக இந்தியா அமெரிக்காவின் பக்கம் சரிவதாலுமே அமெரிக்கா இந் நிலைப்பாட்டை எடுத்தது. ரஉ்ய ஏகாதிபத்தியமோ திருகோணமலையில் அமெரிக்காவின் ஆதிக்கம் ஏற்படாதிருக்க இவ்வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது.

கடந்த காலத்தின் எமது போராட்டம் தோல்வியில் முடிந் ததிற்கு ஏகாதிபத்திய சக்திகள் காரணமாக அமைந்துவிட்டன. இதை வெல் வதற்கு புரட்சியின்பால் சிறந்த பற்று, நேர்மை, சிறந்த தத்துவம், கட்சி என்பன இன்றியமையாதவையாகும். கடந்த காலத்தில் இவை எமது போ ராட்டத்தில் காணப்படாததே எம்மைத் தோல்வியில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது. ஆரம்ப கால கட்டத்தில் குட்டி முதலாளித்துவ சக்திகள்

www.tamilarangam.net

சில இயக்கங்களைத் தோற்றுவித்தன. அவைகளுடன் ஒப்பிடும்போது முற்போக்குச் சக்திகள் மிகவும் சிறிதளவாகவும், பலம் குன்றியனவாகவும், உதிரிகளாகவும் இருந்தன. இந்தக் குட்டி முதலாளித்துவ சக்திகளின் குட்டி முதலாளித்துவ தத்துவமானது நடுத்தரவர்க்க மக்களிடம் நல்ல ஆதரவை பெற்றது. இந் நிலையில் விடுதலைப்போராட்ட இயக்கமானது திடீர் வீக்கத்தையடைந்தது. எமது சமூகத்தில் வளர்ச்சியடைந்த தொழிலாள, விவசாய வர்க்கம் சரியாக கட்டி வளர்க்கப்பட்டு அணிதிரட்டப்படாதது விடுதலை இயக்கங்களினுள் புரட்சிகர சக்திகளினால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போனதற்கு முக்கிய காரணமாகும். இச் சந்தர்ப்பத்தில் குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் நடுத்தரவர்க்க மக்களும் 'வேகமாக' விடுதலையை எடுக்க விரும்பினர். சரியான சித்தாந்தம் நடைமுறை இல்லாததால் போராட்டத்தை ஒரு நிலைக்குமேல் எடுத்துச் செல்ல முடியாமல் தடுமாறினர். இந் நிலையில் இந்தியாவின் காலில் விழுந்தனர். இந்தியாவின் நேரடித் தலையீட்டை இயக்கங்கள் மட்டுமன்றி நடுத்தரவர்க்க மக்களில் பெரும்பான்மையோரும் ஏற்றுக் கொண்டனர். புரட்சிகர சக்திகள் சில தொழிலாள, விவசாய மக்கள் மத்தியில் (இயக்கங்களின் பாசிசம் உட்பட) பல சிரமங்களுக்கிடையே வேலை செய்தனர். இந் நிலையில் உறுதியானதொரு கட்சியைக் கட்டவோ, இந்தியாவை அம்பலப்படுத்தி அதற்காக வெகுஜன ஆதரவைப் பெறவோ இவர்களால் குறுகிய காலகட்டத்தினுள் முடியாமல் போய்விட்டது. அகநிலையான தவறுகளைவிட புறநிலையான யதார்த்தமே புரட்சிகர சக்திகளால் இந்திய ஏகாதிபத்தியத்திற்கெதிராக போராட்டத்தை முன்னெடுக்க முடியாமல் இருப்பதற்கான முக்கிய காரணமாகும். எமது தோல்விக்கான மேற்படி தோல்விகளை சரியாக ஆராய்ந்தால் அடுத்த கட்டப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அது எங்களது பாரம்பரிய பிரதேசத்தில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும்போதே தீர்க்கப்பட முடியும். அந்த அடிப்படையிலேயே 'தமிழீழம்' என்ற தனியரசு உருவாவதற்காக போராட்டம் நடந்தது. முரண்பாடுகளுக்கான அடிப்படைக் காரணம் கண்டுபிடிக்கப்பட்டு தீர்க்கப்படும்போது மட்டுமே தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்படும். எமது நாட்டில் ஆளும் தரகு முதலாளித்துவ வர்க்கத்திற்கும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்திற்கும் உள்ள முரண்பாட்டை திசை திருப்பவே 'இனத் துவேச'க் கொள்கையை அரசு கடைப்பிடிக்கிறது. இன ஒடுக்குமுறையில் வர்க்க அடிப்படை என்பது இதுவே. இந்த அடிப்படையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாதவரை போலி 'ஒப்பந்தங்க'ளாலோ, 'மாகாணசபை'களாலோ பிரச்சினை தீரப் போவதில்லை. மாறாக எமது இனத்தின் மீதான ஒடுக்குமுறை புதிய வடிவத்தை

www.tamilarangam.net

எடுக்கும். அல்லது குறிப்பிட்ட காலத்துக்கு நீறு பூத்த நெருப்பாக இருக்கும். இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையில் சிறந்த உறவு ஏற்படும்போது மீண்டும் இனரீதியான ஒடுக்குமுறை உருவெடுக்கும்.

ஆக, இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணத்தை இந்த ஒப்பந்தம் எந்த விதத்திலும் மாற்றியமைக்காததால் அதனைக் கவனத்திற் கொண்டே எதிர்காலத்தில் தமிழ் மக்கள் முகம் கொடுக்க இருக்கும் பிரச்சினைக்கான தீர்வை நாம் பார்க்க வேண்டும். அந்தத் தீர்வானது தொடர்ந்தும் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசத்தில் பாதுகாப்புக்காகப் போராடுவதை கோரி நிற்கிறது. இம் முறை இந்திய அரசும் எமது எதிரியாகக் கணிக்கப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். முன்பு போல சிங்கள அப்பாவி மக்களைக் கொன்றோ அல்லது இனி இந்திய மக்களுக்கெதிரா பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டோ போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. அப்படி நடப்போமாயின் பழைய இடத்துக்கே மீண்டும் வந்து சேருவோம். சிங்கள, இந்திய முற்போக்குச் சக்திகளின் ஆதரவோடு இனி போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஏற்கெனவே ஒருமுறை எமது போராட்டத்தினூடாகவும், குட்டி முதலாளித்துவ தலைமைகளாலேயோ அல்லது குட்டி முதலாளித்துவ தத்துவத்தாலேயோ போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. ஆகவே புரட்சிகரமான பாட்டாளிவர்க்கத் தத்துவத்தின் மூலம் உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சியொன்றைக் கட்டியே போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழேயே ஏனைய வர்க்கத்தட்டு மக்கள் அணி திரட்டப்பட வேண்டும். இந்த மக்கள் திரளின் முன்னணிப்படையாக கட்சி இருக்கும். இக் கட்சியாலேயே போராட்டம் முன்னெடுக்கப்படும்.

மயூரன்

---

ஆக்கதாரர்களுக்கு,

உங்கள் ஆக்கங்களுக்கான தலைப்புகள், உங்கள் பெயர்களை அழகான கையெழுத்துகளில் எழுதியனுப்புவீர்களாயின் அவற்றை அப்படியே பிரசுரிப்போம். சித்திரம் வரையும் ஆற்றலுள்ளவர்கள் தமது கவிதைகள், கதைகளுக்குப் பொருத்தமான ஓவியங்களை தாமே வரைந்து அனுப்பலாம். ஆக்கதாரர்கள் தமது நண்பர்கள் மூலமும் இதனைச் செயற்படுத்தலாம்.

— கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 29 ஜூலை 1987

**சேரன்**

பெங்களூரில்
ரஜீவும் ஜே. ஆரும் சந்தித்துக்
கொண்டபோது
தூற்றலாக மழை பெய்துகொண்டிருந்தது
வெளியே.

நந்தி மலைகளின் மேலாக
இறங்கிய காற்று
புல்வெளியின் மீது படர்ந்து தவழ்ந்தது.

அன்றும்
அலைகள் ஓங்கிய
பாக்கு நீரிணைக்கு அப்பால்
இருபது பேர் இறந்து போனார்கள்.

தானியங்கித் துப்பாக்கித் தொடர் வேட்டு
கண நேரக் கொலைத்
தீர்ப்பு
எரிப்பு
தெருவுக்குச் சாம்பல்
குழந்தைகளின் கனவுகளுக்கு
இரத்தம்.

ஆக
இப்போதைய எண்ணிக்கை
15587



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முளைக்குள் வெடிமருந்தை
அடைத்துத் திணித்துவிட்டுச்
சித்தம் குழம்பிச் சவாரி செய்தோம்
மக்கள் மேல்
விமர்சனத்தின் வீரியத்தை
விழுங்க முடியாமல்
முகம்தெரியா இருளிலெல்லாம்
கொன்று புதைத்தோமே
நம்மவரை....

பல்லி சொல்லைக் கேட்டுப்
பயணம் கை விட்ட கதை
நமக்குள் பல உண்டே.

யாரொடு நோக.

கணக்கெடுக்க மறந்து
நம் காலத்தைக் கோட்டை விட்டோம்.
தன்னுடைய வரலாற்றைச் சவப்பெட்டிக்குத்
தங்க முலாம் பூசும்
ஜே. ஆருக்குத் துணைபுரிந்த
ரஜீவ் இளவரசனுக்குத்
திரைப்படத்தில் வாள் சுழற்றி
நிஜவாழ்வில் கருப்பிடித்த
ராமச்சந்திர வாழ்த்து.

கை தட்ட வேண்டாம்.
சிரிக்கக் கூட என்ன இருக்கிறது.

சந்தோசப் பித்தேறிச்
சாவதற்கு நமக்கென்ன
இந்திரர்கள் வந்தா
வரம் தந்து போனார்கள்?

முதற் பரிசு போலவும்
முயற்சிக்குத் தலைசாய்த்து
ஆறுதல் பரிசு வாங்க
லொத்தர் விளையாட்டா
போராட்டம்?

www.tamilarangam.net

கோப்பைகளிலிருந்த தேநீர்
திடீரென்று குருதியாக மாறியதை
உணராமல்
இரண்டு தலைவர்களும்
கண்காணாத அரசியலுக்குள்
காலம் சென்றார்கள்.

மானுட எலும்புகளிலிருந்து
வளையப்பட்ட கரண்டிகளும்
மண்டையோட்டு மூலங்களிலிருந்து
பிறந்த தட்டுக்களுமாக
உருமாற்றம் பெற்ற
சாப்பாட்டு மேசை

எல்லாத் தொலைக்காட்சிக் கண்களும்
குருடாயின.

நமக்கு அப்பாற்பட்ட சமரசம்.

தயாரமும் உறுதியும் வீரமும்
இதயம் உள்வாங்கி
ஆயிரமாயிரமாய் உயிர்வாங்கிக்
குருதியில் எழுதிய சரித்திரத்தின் மீது
மை பூசுகிறது
உங்கள் வர்க்க நலன்.

உங்களைச் சொல்லி என்ன?

நாமும்தான்.
பொதுவுடமை லட்சியத்தைக்
குழி தோண்டிப் புதைத்து விட்டு
புதை குழி மேல்
எந்த வகையான கல்லறை கட்டுவது
என்பதில் விவாதம் புரிந்து
அடிபட்டுப் பிளவுற்றுக்
கொலையுண்டு நீர்த்தோம்.
(அதிகார வெறி வேறு)

www.tamilarangam.net

உத்தேச வாய்ப்பாட்டில்
உல்லாசக் கணக்கெழுதி
நித்தியமும் கண்மயங்க
எங்கெங்கோ இருந்தவர்கள்
இனித்தான் வருவார்கள்.

எல்லாம் முடிந்ததா?
இல்லை.


சொல்லுக்குள் அடங்காத
என் சோகத்தைச்
சற்றே கேள்.

நீண்ட பயணம் எனக்
குறுங்காலத் திட்டமிட்டும்
குறுகிய பயணங்களுக்கு
நெடுங்காலத் திட்டமுமாய்க்
குழம்பிய நாள் வேண்டாம்.
குழப்பிய நாள் வேண்டாம்.

நில்லாமல் செல்கின்ற
வரலாற்று ஓட்டத்தின்
முனைப்பறிவோம்.

வா
சரியான கணக்கெடுப்பு.
அதன் பின்னர்
புது எடுப்பு.

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

– பார்த்திபன்

முத்து தலையணையில் முகத்தைப் புதைத்து அழுது கொண்டிருந்தான். அப்போது அந்த அறையில் அவனையும், சடப் பொருட்களையும் தவிர வேறு யாரும் இல்லை. ஜன்னல் திரைச் சீலை மட்டும் நெளிந்து நெளிந்து தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டது.

"எனக்குப் பைத்தியமா?' இந்த நினைப்பே அவனது துக்கத்தைப் பொங்க வைத்துக் கொண்டிருந்தது. முத்துவின் கண்ணீர் வைத்திய சாலைத் தலையணையை ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

'இனி நான் அந்த பில்டிங்கில எப்படி இருக்கிறது? மற்றவங்கள் பகிடி பண்ணப் போறாங்களே? தெரிஞ்ச ஆக்களெல்லாரும் சிரிக்கப் போறாங்களே?'

நினைக்க நினைக்க கண்ணீர் வந்து கொண்டிருந்தது. வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நீண்ட நாட்களின் பின்பே தான் எதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறோம் என்று முத்துவுக்குத் தெரிந்தது. சுற்றியுள்ளவர்களைப் பார்த்தும் புரிந்து கொள்ளாமலிருக்க முடியுமா?. மருத்துவர்களின் கவனிப்பும், விசாரணைகளும் அவனுடைய சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தபின் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

| தொடர்கதை | 32 |
|---|---|



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றிலிருந்து அழுகை மட்டுமே அவனுடன் துணைக்கிருந்தது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவனை ஆறுதல் படுத்தியது.

வெளியே அரவம் கேட்க முத்து கண்களைத் துடைத்துக் கொண்டான். தொலைக்காட்சி பார்க்கப் போனவர்கள் வருகிறார்கள். இந்தக் கோலத்தில் பார்த்தால் வருத்தம் 'முற்றி' விட்டது என்றும் நினைத்துக் கொள்வார்கள்.

முத்து கட்டிலை விட்டிறங்கி அவசரமாகக் குளியலறைக்குப் போய் முகம் கழுவிக் கொண்டான். குளிர்ந்த நீர் முகத்துக்கு ஒத்தடம் கொடுத்தது. அந்த சுகத்தில் கொஞ்ச நேரம் அப்படியே நின்று கொண்டான்.

ஏனைய நோயாளிகள் ஆர்ப்பாரித்து அறைகளுக்குள் வந்தார்கள். தமது இயல்பான காரியங்களில் மூழ்கினார்கள்.

முத்து முகம் துடைத்துக் கொண்ட பின் அறைக்கு வெளியே வந்து, விறாந்தையின் முடிவில் நின்று ஜன்னலால் வெளியே தெருவைப் பார்த்தான்.

அவ்வப்போது சில வாகனங்கள் ஒளி வீசிக் கொண்டு போயின. வானத்தில் இருள் பூசியிருக்க, சந்திரனைக் காணவில்லை. எங்கோ 'இன்ரசிற்றி' போகும் சத்தம் கேட்டது.

'ஆஸ்பத்திரிக்கு வந்ததுக்கு வீட்ட கடிதமே போடயில்ல. என்னத்த எழுதுறது? அங்க அதுகள் பட்டுக் கொண்டிருக்கிற கஉ்டங்கள் பத்தாதெண்டு என்ரை வருத்தத்தையும் எழுதிக் குழப்ப வேணுமே?'

'நான் வருத்தமாயிருக்கிறன் எண்டு வேறு ஆரேன் வீட்ட எழுதிப் போட்டிருக்க மாட்டாங்களே? கிழிச்சாங்கள். ஆரேன் வேல செய்தா மட்டும் அவன் இங்க வேல, மற்றவன் அங்க வேல எண்டு உடன எழுதியனுப்பிப் போடுவாங்கள். வருத்தம் வந்தா ஆர் கவலைப்படப் போறாங்கள்?'

முத்து தனக்குள் யோசித்தவாறு வானத்து இருட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். சந்திரனை இன்னும் காணவில்லை.

'என்ரை பில்டிங்கில என்னோட இன்னும் எத்தினை பேர் இருக்கிறாங்கள். அவங்களுக்கு வராம எனக்கேன் இப்பிடி வருத்தம் வந்தது? அவங்கள் குடிக்கிறாங்கள். ஆளைஆள் அடிக்கிறாங்கள். கண்ட கண்ட இடத்துக்கெல்லாம் போறாங்கள். சும்மா இருந்த எனக்கு வருத்தம்.'

'அப்பிடியெண்டா சும்மா இருந்தபடியாத்தான் மூளை குழம்பினதோ? அவங்களை மாதிரி தொடந்து இயங்கிக் கொண்டிருந்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோசிக்க நேரமே கிடைச்சிருக்காது. நான் மனுசனா இருந்ததுதான் பிழை. எல்லாத்தையும் பாத்துக்கொண்டு தனிய இருந்து யோசிச்சதுதான் பிழை. துண்டு வெட்டிக் கொண்டு போனபிறகு தொடர்ந்தும் இதே பிழையை விடக் கூடாது.'

நீண்ட நேர ஆய்வின் பின் முத்து மனதை ஒருநிலைப் படுத்திக் கொண்டான். வானத்தில் இப்போது சந்திரன் வந்திருந்தது. ஆனால் பாதியாக.

முத்து அறைக்கு வந்து கட்டிலில் சாய்ந்தான். நிம்மதியாகத் தூக்கம் வந்தது.

ஒரு வாரத்தின் பின் தலைமை மருத்துவர் அவனைத் தனது அறைக்குக் கூட்டிச் சென்றார்.

"சிற்ஸன் வீ பிற்ற" (தயவு செய்து அமருங்கள்"

"டங்க" (நன்றி)

(இனித் தமிழாக்கம்)

"இப்போது எப்படியிருக்கிறது?"

"நன்றாக இருப்பதாக உணர்கிறேன்"

"இன்று மாலையே நீங்கள் வீட்டுக்குப் போகலாம்"

"நன்றி"

"நான் சில யோசனைகள் கூறுகிறேன். இவற்றை நீங்கள் பரிசீலித்தால் நல்லது. உங்களுக்கு எப்படி இந்த நிலை வந்திருக்கலாம் என்பதை அறிவதற்காக இந்த நகரிலுள்ள அகதிகள் உதவி நிறுவன அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டேன். அவர் நீங்கள் வாழும் சூழ்நிலை பற்றிய விபரங்களைத் தெரிவித்தார். அவற்றிலிருந்து சில தகவல்களை என்னால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இந் நாட்டின் அரசியற் தஞ்சச் சட்டங்களினால் நேரம் உங்களுக்கு அதிகமாக இருக்கிறது. இதுவே உங்களைப் பெரிதும் பாதிக்கிறது. உங்களுடைய தாய்நாட்டில் குடும்பத்துடன் ஒன்றாக வாழ்ந்த நிலையிலிருந்து பிரிந்து முற்றிலும் தனிமையான வாழ்க்கை முறைக்கு வந்திருக்கிறீர்கள். இதனால் சரியான திட்டமிடாமை காணப்படுவதோடு என்ன செய்வது என்றும் உங்களுக்குத் தெரியாமலிருக்கிறது. அதனால்தான் உங்களில் பலர் புகைத்தல், மது அருந்துதல் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். இவற்றில் ஈடுபடாதவர்கள் தனியே இருந்து பழைய வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிப் பயப்படுகிறார்கள். வயதுக்கு மீறிய நீண்ட சிந்தனைகளால் நரம்புகள் விரைவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைத்துவிடுகின்றன. இதனால் மந்தநிலை உண்டாகிறது. இதனைத் தாங்கும் வலுவற்றவர்கள் இலகுவில் சுயநினைவை இழந்து விடுகிறார்கள்.

ஆகவே இயலுமானளவு ஏதாவது செய்யுங்கள். பல அலுவல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். புத்தகங்கள் படிக்கலாம். இந்நாட்டு மொழியைக் கற்கலாம். பொழுதுபோக்கு ஆட்டங்கள் விளையாடலாம். சுய முயற்சியாக கைத் தொழில்கள் ஏதாவது செய்யலாம். உங்களில் அதிகமானோர் இளைஞர்களே. என்ன செய்வது என்று தெரியாத நிலையில் உங்களை நீங்களே அழித்துக் கொள்ளாதீர்கள்"

முத்துவின் பதிவு முடிக்கப்பட்டது. வைத்தியசாலை உடைகளிலிருந்து சாதாரண உடைகளுக்கு மாறினான். எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு, வைத்தியசாலையிலிருந்து வெளியே வந்து புதிய காற்றைச் சுவாசித்தபோது முத்துவுக்கு கண்ணீர் துளித்தது.

பஸ் நிலையத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்போது பாலகுமாரும், ஞானமும் வந்தார்கள்.

"என்ன ரைமுக்கு வாறியள்?"

"நாங்க இப்ப கிட்டத்தட்ட டொச்காரரர் மாதிரித்தான்"

மூவரும் பஸ்நிலையத்துக்கு வந்தார்கள். பஸ் ஒரு நிமிடம் பிந்தி வந்து அவர்களை ஏற்றிக்கொண்டது.

"என்ன புதினங்கள்?" முத்து ஆர்வமாக விசாரித்தான்.

"அதையேன் கேக்கிறாய்? பெரிய அநியாயமே நடந்து கொண்டிருக்கு" பாலகுமார் புதிர் போட முத்து ஆவலானான்.

"சொல்லன்ரா?"

"இங்க இருக்கிற தமிழாக்கள் எல்லாருக்கும் இமிக்கிரன் குடுக்கப் போறாங்களாம்"

முத்துவின் கண்கள் நம்பவில்லை என்று தெரிவித்தன. ஞானத்தைப் பார்த்தான்.

"அவன்ரை கதையை விடு. உள்நாட்டமைச்சர் சிம்மமான் சொல்லியிருக்கிறார் தாங்களா இலங்கைக்குத் திரும்பிப் போகப் போறோம் எண்டு சொல்லுற தமிழாக்களுக்கு முந்நூறு டிஎம் தருவினமாம்" ஞானம் விசயத்தைச் சொன்னான்.

"சீ. உண்மையாவே?"

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 ஜுலை 1988 கலம்: 7

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

வெளியீடு............ தென்னாசிய நிறுவனம்

முகவரி................ SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202·507156

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

© SÜDASIEN BÜRO

Nachdruck nur mit genehmigung
das Herausgebers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாதச் சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)
6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 2 டி.எம். மேலதிகமாகும்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளாவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL

BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்